MELUR MUNICIPALITY
Minutes of the Council Meeting held on 13.06.2019 (Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 514 | **பொருள் எண்.1**<br><br>அரசாணை (நிலை)எண்.84 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள்.25.06.2018ன்படி ஒருமுறையே பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களுக்கு 01.01.2019 முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அதனை சேகரித்து வைப்பவர், விற்பனை செய்வோர் விநியோக செய்வோர் மீது நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 306ல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு பிரிவு 306(28) ன்படி துணை விதிகள் 2019ம்ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 12ன் கீழ் இயற்றப்பட்டு தண்டங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.44555/2013/பி3 நாள்.28.02.2019 நாளிட்ட கடிதத்தில் மேற்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920பிரிவு 306(28ஏ) ன்படி இயற்றப்பட்டுள்ள துணை விதிகளின்படியான தண்டங்களுக்கு மிகாமல் அந்தந்த நகராட்சிகளில் தண்டங்கள் நிர்ணயம் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.54 நாள்.04.05.2017ல் துணை விதிகள் இயற்றப்பட்டு மாவட்ட அரசிதழ் எண்.7 நாள்.08.12.2017ல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி கீழ்க்கண்டவாறு தண்டத்தொகையினை நிர்ணயம் செய்து கொள்ளவும், செயல்படுத்தும் அலுவலர் ஆய்வு அலுவலர், வணிகவகைப்பாடு ஆகிய துணைவிதிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.<br><br>**துணைவிதிகள்**<br>**துணைவிதிகள் மீறுவதற்கான தண்டங்கள்** | அனுமதிக்கப்பட்டது |

| வ எண் | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான | இரண்டாம் முறையான குற்றத்திற்கான | இரண்டாம் முறையான குற்றத்திற்கான |
|---|---|---|---|---|

| | | பணத்தண்டம் | பணத்தண்டம் | பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1 | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் , கொண்டுசெல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ5000 | ரூ10000 | ரூ15000 |
| 2 | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ2000 | ரூ5000 | ரூ10000 |
| 3 | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ1000 | ரூ2000 | ரூ5000 |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்கள் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ100 | ரூ200 | ரூ500 |
| | | | | |

**செயலாக்க அதிகாரி**

நகராட்சி ஆணையர்

**ஆய்வு நடத்தும் அதிகாரி**

துப்புரவு அலுவலர், துப்புரவு ஆய்வர் மற்றும் ஆணையரால் அங்கீகரிக்கப்பட்ட இதர பணியாளர்கள்

**தண்ட வகைகள்**

ஸ்தல பண அபராதம், பொருட்களை பறிமுதல் செய்தல், உரிமத்தை இரத்துசெய்தல் உள்ளிட்டவை.

**வர்த்தக நிறுவன வகைப்பாடு சேமிப்பு மற்றும் விற்பனை**

| | | |
|---|---|---|
| | 500ச.அடி முதல் 2000 ச.அடி வரையிலான வியாபார கட்டிடங்கள் அனைத்தும் மற்றும் அதற்கு மேலும்<br>**வணிக நிறுவனங்கள்**<br>1. பெரிய மற்றும் சிறிய துணிக்கடைகள்<br>2. பல்பொருள் அங்காடிகள் பெரியது.<br>3. திரை அரங்குகள்<br>4. அரசு மதுபானக்கடை மதுபான கூடங்கள்(BAR) மனமகிழ் மன்றம் முதலானவை<br>5. கல்வி நிறுவன வளாகங்கள்<br>6. அரசு மற்றும் அரசு சார்ந்த மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்கள்<br>7. திருமண மண்டபங்கள் , தங்கும் விடுதிகள், உணவகங்கள் முதலானவை.<br>8. பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள்.<br>அலுவலகக்குறிப்பு<br>1.மேற்படி துணை விதிகளுக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி முன்அனுமதிபெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் ஏற்கலாம்.<br><br>(ந.க.எண். 519 /2017/எச்1) | |
| 515 | **பொருள் எண்.2**<br><br>திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 பிரிவு 15ன்படி அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் மாநில திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் செயல் திட்டத்தினை பின்பற்றி திடக்கழிவு மேலாண்மை கொள்கையியினை தயார் செய்யப்பட வேண்டும். அதன்படி இந்நகராட்சிக்கென திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் செயல்திட்டம் தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.2288/2019/பி3 நாள்.26.03.2019ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டு, அரசிதழில் விளம்புகை செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அரசிதழில் விளம்புகை செய்யும்பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது. அதற்காகும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | (கோப்பு எண்.519/2017/எச்1) | |
| 516 | **பொருள் எண்.3**<br>திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 9 வார்டு பகுதிகளில் தனியார் துப்புரவு பணி நிறுவனமான ஜெய்சீரடி சாய் மேன்பவர் ஏஜென்சி, மதுரை நிறுவனத்தின் மூலம் 07.05.2018முதல் 30.04.2019 வரை பணி செய்ய உத்திரவிடப்பட்டு துப்புரவு பணி நடைபெற்று வருகிறது. தற்போது பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது.<br>மேலும் மேற்படி நிறுவனம் நல்ல முறையில் பணிசெய்து வருவதாக துப்புரவு ஆய்வர் கொடுத்துள்ள சான்றின் அடிப்படையில் 01.05.2019 முதல் 30.04.2020 வரை ஏற்கனவே பணிபுரிந்து வரும் ஜெய் சீரடி சாய் மேன்பவர் ஏஜென்சி, மதுரை நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1) பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று ஜெய் சீரடி சாய் மேன்பவர் ஏஜென்சி, மதுரை நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 517 | **பொருள் எண்.4**<br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.28369/ஜே3/2018 நாள்.22.11.2018 அனுமதியின்படி மேலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் அனைத்து வகை திடக்கழிவு மேலாண்மை மற்றும் தெரு கூட்டுதல், சாக்கடை சுத்தம் செய்தல் உள்ளிட்ட பணிகளை தனியார் நிறுவனம் மூலம் 92 பணியாளர்களைக் கொண்டு துப்புரவு பணிமேற்கொள்ள 25.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதை 03.01.2019 அன்று தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக் கட்டணம் ரூ.71820/– ஐ பிரைட் அட்வர்டைசிங், சென்னை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதிபெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 518 | **பொருள் எண்.5**<br><br>சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.4980/2018/ஜே3 நாள்.10.05.2019ன்படி 20 வருடங்கள் மாசற்ற முறையில் விபத்துகள் எதுவும் ஏற்படுத்தாமல் பணியாற்றிய இந்நகராட்சி ஓட்டுநர் திரு.கே.பழனிக்குமார் என்பவருக்கு தங்கப்பதக்கம் மற்றும் நற்சான்று வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி தங்கப்பதக்கம் 4 கிராமில் தமிழ்நாடு கைவினை தொழிலாளர் வளர்ச்சி கழக உற்பத்தி நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெற்று வாங்கவும், அதற்கான உத்தேசசெலவினம் ரூ.20000க்கும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.368/2019/சி1 | அனுமதிக்கப்பட்டது |
| 519 | **பொருள் எண்.6**<br><br>மேலூர் நகராட்சி தினசரி காய்கறி சந்தை 2019–2022 முடிய வசூல் செய்யும் உரிமம் ஏலம் நடைபெற்றது தொடர்பாகதிரு.எஸ்.பரதன் த/பெ வி.சோமசுந்தரம் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் தொடரப்பட்டுள்ள வழக்கு எண்.W.P.(MD).No.5405/2019ல் நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.ஜே.குணசீலன்முத்தையா அவர்கள் ஆஜராகவும் அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.9500/– வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் இவ்வழக்கில் அரசு வழக்கறிஞர் திரு.ஜே.குணசீலன்முத்தையா அவர்களின் 14.03.2019ம் தேதிய கடிதத்தின்படி 15.03.2019ம் தேதிய விசாரணையில் தமிழக அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் திரு.கே.செல்லப்பாண்டியன் அவர்கள் ஆஜராகவும் அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.35000 வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.77/2019/அ2) | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 520 | **பொருள் எண்.7**<br><br>மேலூர்நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள உணவகத்தின் உரிமதாரர் திரு.பகீரதன் என்பவரது உரிமத்தினை ரத்து செய்து பொது ஏலம் விடக்கோரி திரு.ஏ.பி.இளங்கோ என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் 01.03.2019ம் தேதிய தீர்ப்பாணையில் 15.04.2019ம் தேதிக்குள் பொதுஏலம் நடத்த தெரிவிக்கப்பட்டு உள்ளது. தற்சமயம் பாராளுமன்றத் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் பொதுஏலம் நடத்த கால அவகாசம் வழங்கக் கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.ஜே.குணசீலன்முத்தையா அவர்கள் மூலம் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.6000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2768/2018/அ2) | அனுமதிக்கப்பட்டது |
| 521 | **பொருள் எண்.8**<br>மேலூர் நகராட்சி மில்கேட் பகுதியில் அமைந்துள்ள சமுதாயக் கூடத்தின் உரிமதாரர் திரு.ஆர்.இளங்கோ என்பவரால் வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P.(MD).No. 23724/2018க்கான 27.02.2019ம் தேதிய தீர்ப்பாணை குறித்து அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.ஜே.குணசீலன்முத்தையா அவர்களால் 29.04.2019ம் தேதியில் வரப்பெற்றுள்ள சட்டக் கருத்தருவிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2617/2018/அ2) | அனுமதிக்கப்பட்டது |
| 522 | **பொருள் எண்.9**<br><br>மேலூர் நகராட்சி தினசரி காய்கறி சந்தை வசூல் உரிமம் பொதுஏலம் தொடர்பாக திரு.எஸ்.பரதன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P.(MD).No. 5405/2019ன் மனுதாரர் | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | செலுத்திய வைப்புத்தொகை அன்னாருக்கு திரும்ப வழங்குவது தொடர்பாக அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.ஜே.குணசீலன்முத்தையா அவர்களால் வழங்கப்பட்ட சட்டக்கருத்துருவிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.5000/— (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.77/2019/அ2) | |
| 523 | **பொருள் எண்.10**<br>மேலூர் நகராட்சி பேருந்து நிலையம் அருகில் சாலையில் வியாபாரம் செய்வதை நகராட்சியால் அப்புறப்படுத்துவதை ஆட்சேபித்து திரு.எஸ்.தமிழ்செல்வன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் வழக்கு எண். W.P.(MD).No.555/2019 தொடரப்பட்ட வழக்கில் அரசு வழக்கறிஞர் திரு.ஜே.குணசீலன் முத்தையா அவர்கள் மூலம் எதிர்வாதுரை தயார் செய்ததற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.3000(ரூபாய் மூவாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.45/2019/அ2) | அனுமதிக்கப்பட்டது |
| 524 | **பொருள் எண்.11**<br><br>மேலூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள உணவகம் 27.06.2019ம் தேதியன்று பொதுஏலம் நடைபெறுவதை மதுரைமணி நாளிதழில் விளம்பரம் செய்ததற்கான விளம்பரக்கட்டணம் ரூ.18,432/— (ரூபாய் பதினெட்டாயிரத்தி நானூற்றி முப்பத்திரண்டு மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2768/2018/அ2) | அனுமதிக்கப்பட்டது |
| 525 | **பொருள் எண்.12**<br><br>இந்நகராட்சிக்குச் சொந்தமான கருத்தபுளியம்பட்டி நகராட்சி ஆரம்பப்பள்ளியில் கூடுதல் கட்டுமானப் பணி | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1) எஸ்.முத்துவேல் 0.14 % குறைவு<br>2) கே.பதுருனிஷா 1.94%அதிகம்<br>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள எஸ்.முத்துவேல் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1) அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 526 | **பொருள் எண்.13**<br><br>இந்நகராட்சி எல்லையில் 6 இடங்களில் அமைந்துள்ள Onsite compost centre மற்றும் Micro compost centre ஆகியவைகளுக்கு தேவையான Portable sherdding machine, Standby sherdding machine மற்றும் Plastic sherdding machine விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.6.75 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1. அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1240/இ1/2019 | அனுமதிக்கப்பட்டது |
| 527 | **பொருள் எண்.14**<br><br>இந்நகராட்சியில் உள்ள தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரிக்கும் பணி 30.06.2019 உடன் முடிவடைகிறது. எனவே 01.07.2019 முதல் 31.12.2019 வரை ஆறுமாதங்களுக்கு பராமரிப்பு பணி ரூ.4.90இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 1. அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதிபெற்ற ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 528 | **பொருள் எண்.15**<br><br>இந்நகராட்சிக்கு சொந்தமான கருத்தபுளியம்பட்டி நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு தேவையான டேபிள், சேர் மற்றும் ஸ்டீல் பீரோக்கள் விநியோகிக்கும் பணிக்கு ரூ.10.00இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பள்ளி திறக்கப்பட உள்ளதால் மேற்கண்ட பணியை நகராட்சி விதிகள் 15ன் கீழ் மேற்கொண்டமை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு:– மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 529 | **பொருள் எண்.16**<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 பட்டாக்குளம் பகுதியில் அமைந்துள்ள Gasifier எரிமேடையில் தகனமேடை மற்றும் தண்ணீர் வசதிகள் அமைக்கும் பணிக்கு ரூ.7.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1.அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1241/இ1/2019 | அனுமதிக்கப்பட்டது |